தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2	சென்னை	5—11—55	சனிக்கிழமை	இதழ் 21

சிங்காரச் சென்னையின் வனப்பில்



செனட் அவுஸ் காட்டும் சிரிப்பு!

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் **திருக்குறள் புது உரை**	உள்ளே	புன்மொழிப் புலவர் அப்பாதுரையாரின் **சிலம்பு வழங்கும் செல்வம்**

திருக்குறள் புது உரை

காவலன் காவான் எனின்...?

தமிழர்கள் ஆண்ட நாளில் அரசியல் ஆறு துறையாய் வகுத்து ஆட்சி நடத்தப்பட்டது. அவை, உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு என்பன.

உழவும் தொழில் என்னும் துறையில் அடங்குமேனும், சிறப்புக் கருதி உழவுத்தொழிலைத் தனித்துறையாக வைத்துக் கருத்தூன்றிக் காத்து வந்தார்கள். உழவும் தச்சும் (சிற்பம்) நீங்கிய பிறவேலை அனைத்தும் தொழிற்றுறையில் அடங்கியவை.

எழுத்து, சொல், பொருள் என்பனவும் கோள்நிலையறிதல், மருத்துவம் முதலியனவும் போர்ப் பயிற்சியும் கல்வி என்ற துறையில் அடங்கும்.

வரைவு என்னும் துறையாவது யாது ?-எல்லைப் பிரிவை உறுதிசெய்தல், கோட்டை கட்டுதல் முதல் குளம் வெட்டுதல் வரைக்குமுள்ள இடங்களை வரையறுத்தலும் அளவு செய்தலும் முதலியவை.

இந்த ஆறு துறைக்கும் அக்காலத்தில் ஆறு அமைச்சர்களை அமைத்துத் திறம்பட நாட்டைக் காத்து வந்தான் தமிழரசன் !

ஆறு துறையே அன்றிப் போர்த்துறை ஒன்று தனியே இருந்து வந்ததோ எனில் அவ்வாறில்லை. கல்வி என்னும் துறையில் போர்ப் பயிற்சியும் அடங்கியது என்று முன்னமே சொன்னேன். ஒரு துறைக்கு ஓர் அமைச்சனே அன்றிப் பல அமைச்சரை அமைத்தலும் உண்டு.

இந்த ஆறு துறையின் ஆறு அமைச்சர்களுக்கும் அலுவலகம் ஒன்றே; அது இந்நாளைய, செக்ரடேரியேட் போன்றது. அந்த அலுவலகத்தில் கருமத்தலைவன் ஒருவனிருப்பான். அவன் எல்லாத் துறையிலும் வல்லவன். அவனுடைய அலுவற் பெயர் "வள்ளுவன்" என்பது.

'வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னற்கு
உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்'

என்னும் பிங்கலந்தைச் செய்யுள் இங்குக் கருதத் தக்கது. உள்படு கருமத்தலைமை என்பது வள்ளுவன் என்ற அலுவற் பெயரையே குறித்து நின்றது காண்க.

பின் நாளில் வள்ளுவன் என்ற சொல் சாதியைக் குறிப்பதாகக் கரு தும் நிலை உண்டாயிற்று. இப்படிப் பல. அகம்பட்டன் என்ற சொல் அரசனின் அகச்சுற்றம் ஆறில்-மருத்துவப் புலவன் பெயர். இதைப் பண்டிதச் சொல்லாலும் வழங்கி வந்ததுண்டு. இந்நாளில் இழிந்த சாதிக்காரர் என்று எண்ணும்படி ஆக்கப்பட்டிருக்கிறது.

வள்ளுவன் என்ற சொல், வண்மையினடியாகப் பிறந்தது. வண்மை என்றது அறிவு வளத்தை. (நம் திருவள்ளுவர் இயற்பெயர் தேவர் என்பதும், அவரின் அலுவற் பெயரே வள்ளுவர் என்பதும் இங்கு நாம் அறிந்து இன்புறுவோமாக.)

அந்நாளில் அரசியல் பொறி என்ன அழகாக, எவ்வளவு திட்டவட்டமாக இயங்கி வந்தது என்பதை நாம் உற்று நோக்க வேண்டும். இதை விவரிக்க இங்கு இடம் போதவில்லை.

கோனாட்சி, குடியாட்சி, குடிக்கோனாட்சி என்ற அரசியல் முறைகளில் அந்நாளைய ஆட்சியைக் குடிக்கோனாட்சி எனல் வேண்டும். இந்நாள் சில நாடுகள் நல்லதோர் ஆட்சிமுறையில் நடந்துவருவன என்று நாம் எண்ணுகின்றோம். இருக்கலாம். அது மட்டுமல்ல. இன்னும் சிறந்த வகையில் ஆட்சி முறை வகுக்கப்படலாம். அவை அனைத்தும் பண்டைய தமிழர் வகுத்த குடிக்கோனாட்சியில்தான் வந்து முடியும் என்பது மறுக்க முடியாதது.

குடிக்கோனாட்சி ஒன்றுதான் சனநாயகம்-குடியாட்சி என்பதெல்லாம். மக்களின் நன்மையை - அவர்களின் முழுஉரிமையை முன்னின்று நடத்த என்றைக்கும், எங்கும் ஓர் ஆள் வேண்டும். மக்களே நேரிலிருந்து தமக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்வதென்பது முடியாதது.

முடுக்கிவிட்டால், அரசியற்பொறி (எந்திரம்) தன்னிலையில் சுழன்று கொண்டு போகுமே அதற்கு அரசன் எதற்கு என்று கேட்கலாம். இது அறிவற்ற கேள்வி. பொறி இயக்குவோனின் அன்புள்ளம் அப்பொறி இயங்க இன்றியமையாத ஓர் மின்னுற்றல்.

அரசன் தன் காத்தற்றொழிலைச் செவ்வனம் செய்யான் எனில் ஆறு துறையும் நடவா. நாட்டுக்கு ஆகிக்கொண்டுவந்த பயன் ஆகாமலே அளவிற் குன்றிவிடும்

இவற்றை எல்லாம் வள்ளுவர் நமக்கு ஒரே குறளில் காட்டுகின்றார். பழந்தமிழ் நாட்டின் படப்பிடிப்பை நாம் அறிந்து கூத்தாடவேண்டும்.

என்ன ?

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் 10 ம் செய்யுள் இது.

'காவலன் காவான் எனின் ஆபயன் குன்றும். அறுதொழிலோர் நூல் மறப்பர்' என்று மொழி மாற்றிப் பொருள் கொள்க.

ஆபயன் என்பதற்குப் பரிமேலழகர் பசுவின் பயன் (பால்) குறையும் என்று பொருள் கொண்டார். அவர் ஆபயன் என்றதை ஆவினது பயன் என ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொண்டார். அவ்வாறு கொண்டால் ஆப்பயன் என ஒற்றுமிக வேண்டும் 'ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர்' என்ற சிலப்பதிகாரத்திற்போல !

எனவே, ஆபயன் என்பது வினைத்தொகை நிலைத்தொடர் என்க. காலங்கரந்த பெயரெச்சம் வினைக்குறை என்பது வினைத்தொகை இலக்கணம்.

ஆபயன் என்பது ஆனபயன், ஆகின்றபயன், ஆகும்பயன் என முக்காலத்துக்கும் விரியும். இங்கு ஆனபயன் என்ற இறந்த காலத்துக்கு விரிக்க. ஆபயன் (ஆனபயன்) என்றால் அரசன் நல்லபடி ஆண்டுவந்த போது ஆனபயன் என்பது பொருள். அவை யாவன : பகையரசர் அஞ்சிக் கப்பம் கட்டுதல், வரி வரவு முதலியவை.

இனி, அறுதொழிலோர் என்பது உழவு, தொழில், வாணிகம், கல்வி, தச்சு, வரைவு ஆகிய ஆறுதொழிலுக்குரியோர். அவர் தாம் ஆறு அமைச்சர்.

நூல் மறப்பர் - தம் கொள்கையை விடுவர்.

நூல் - கொள்கை, மறத்தல் - கைவிடுதல்.

இனிப், பரிமேலழகர் அறுதொழில் என்பது ஆரிய மறையோது தல், ஓதுவித்தல், வேட்டல் (கொலை வேள்வி முதலியவை), வேட்பித்தல், அறிவு தரல், பிச்சைபுகல் ஆகிய அறுதொழில் என்றார். பொருந்துமா ? ஆரியர், தீயொழுக்கம் தமிழர்பால் நலைநிட்டத் தொடங்கக் கண்டருளிய வள்ளுவர் அவற்றை மறுத்துத் தமிழரை தமிழர் நெறியில் நிறுத்த அருளிய திருக்குறளில், ஆரியர் அறுதொழில் இந்நாட்டில் நடவாது ஒழிந்துவிடுமே என்று அழுவார்? எனவே, பரிமேலழகர் கொண்ட பொருள் பொய்ப் பொருள் என விடுக்க.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எம்.எல்.ஏ

◉ ◉ ◉ ◉ ◉

நமது கம்யூனிசம் வென்றது !

ஏழ்மைக்கான காரணங்களைக் காட்டாமல், ஏழைகளின் இதயங்களை முதுக்கேற்றி விட்டு வேடிக்கை பார்ப்பதுதான் பொதுவுடைமைத் தத்துவம் என்ற 'அரசியல் வேதாந்தம்' மதுரையிலே முறியடிக்கப்பட்டு விட்டது.

'தலைவிதி'த் தத்துவத்தை வழி மொழியும் தென்னாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி, 'தொழிலாளி வர்க்கத்தை'க் கைதூக்கி விடுவது எங்ஙனம் என்பதை மதுரை மக்கள் புரிந்துகொண்டனர். "ஏழ்மைக்குக் காரணம், தலைவிதியுமல்ல; ஏழுமலையான் 'திரு'விளையுமல்ல; எதற்கும் காரணம் கேட்கும் மனவளம் பெறுவதுதான்" என்னும் தி. மு. கழகத்தின் பொதுவுடமைக் கொள்கையை கூடல் நகர்வாசிகள் விளங்கிக் கொண்டனர்.

'எங்கள் பாசறை' என்று கம்யூனிஸ்டுகளால் பெருமைப்படுத்தப் பேசப்பட்ட தொகுதியில் மதுரை மாவட்டத் தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள், பிரபல கம்யூனிஸ்ட் டான் ராமையா என்பவரைத் தோற்கடித்தார். நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கும் இந்த மதுரை-வெற்றி தென்னாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தீராத அதிர்ச்சியாகும்.

உண்மையான பொதுவுடமைவாதியைத் தேர்ந்தெடுத்த மதுரை ஒன்பதாவது வார்டு வாக்காளர்களும் தோழர் முத்துவுக்கு துணை நின்று பணியாற்றிய மற்றவர்களும் நாட்டின் நலன் விரும்பிகளின் பாராட்டுக்குரியவர்கள்.

◉ ◉ ◉ ◉ ◉

ஆசிரியத் தோழருக்கு

-இராசன்-

அன்புமிக்க ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம்.

தங்கள் "வள்ளுவன்மூத்தோன்" பற்றி ஒரு சொல்: வள்ளுவரது கவிதைப் பண்பிற்கும் கம்பரது கவிதைப் பண்பிற்கும் வேறுபாடு காட்டியும், கம்பரது கவிதையின் கரு, ஆரியப் பண்பாட்டின்படி இயங்குவதாலே, அவர்பாற் சில குறைபாடுகள் தோன்றுகின்றனவென்னும் கருத்துப்படவும் எழுதி வருகின்றீர்கள். அவ்வழி,வள்ளுவனின் வான் பெருஞ் சிறப்பு விளங்குகின்ற தென்றாலும், சிலவிடங்களிற் கம்பனது பாடல்கள் வலிந்து குறைபாட்டுக் காளாக்கப்படுகின்றனவோ என்று தோன்றுகின்றது.

27-8-55 இதழில் "தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே" என முடியும் கம்பன் பாடலின் பண்புக் குறைவினையும், 1-10-55ல் "செம்மாந்த தெங்கின்" எனத் துவங்கும் பாடலின் சுவைக் குறைவையும் நன்குக எடுத்துக் காட்டியிருக்கின்றீர்கள். மகிழ்ச்சி. அவ்விடங்களிற் கம்பன் உயர்பண்பினின்று நழுவுவதாகவே தோன்றுகின்றது.

ஆனால், 20-8-55ல் எடுத்துக் காட்டிய 'இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்' என முடியும் பாடற்கு மிக வலிந்து பொருள் கொள்வதன் மூலமே கம்பனைக் குறை கூற முடியும் என்று தோன்றுகின்றது.

மேலும் கம்பனது காவியம் ஆரியக்கருக் கொண்டியங்குகின்றது எனும் உண்மையை மேலும் வலியுறுத்தற்கு இக்கவிதைக் குற்றங்கள் துணைபுரியுமோ? என்ற ஐயம் எழுகின்றது.

"கொள்ளைப் போர்வாட்கணுள்" (உண்ப. 59) (17-9-55) எனத் துவங்கும் பாடலிற் காதலி ஊடலால் காதலன் மார்பில் உதைத்தனள் எனவரும் கருத்து வேறுசில தமிழ் நூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாகத் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடல் 397ல் "சிலைமலி வாணுதல் எங்கையதாகமெனச் செழும்பூண் மலைமலி மார்பினுதைப்பத் தந்தானறலை..." என வருகின்றது. மார்பில் உதைத்து ஊடுதல் 'மிருக குணம்' என்றோ, 'அடிதடிக்காதல்' என்றோ கொள்ளப்படுதல், தமிழ் நூல்களிடையே நிலவும் சில மரபு கட்கு முரண்பாடாகத் தோன்றுகின்றது.

இன்னும், 22-10-55 இதழில், "இளைக்கலாத கொங்கைகாள்" எனத்துவங்கும் கம்பன் பாடலைக் காட்டிக் "கொங்கையொடு இளைத்து இன்றுள் ஆரியபத்தினி! இப்படிப்பட்ட கற்பனை வேறு தமிழ்க்காப்பியங்களில் துருவி ஆய்ந்தாலும் கிடைக்காது" எனக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால் தமிழில் சிறந்த வொரு நூலாய முத்தொள்ளாயிரத்தில் (அது காப்பியமாக இல்லாவிடினும்) "நாணுக்காற் பெண்மை நலனழியும்" என்ற, தாங்கள் எடுத்தாண்ட அடியில் துவங்கும் பாடலுக்கு அடுத்தபடியாக வரும் பாடலே,

"வாருயர் பெண்ணை
வருகுரும்பை வாய்ந்தனபோல்
ஏரிய வாயினு மென்செய்யும்
—கூரிய
கோட்டானைத் தென்னன்
குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை."
(பாடல் 29)

எனவெழுந்து, கம்பனின் பாடற் கருத்துடன் ஒன்றிச் செல்கின்றது. இதனை ஆரியப் பண்புகொண்டியங்குகின்றது என்று கூறிவிட முடியாது.

வள்ளுவனேடொப்பிடுங்கால் கம்பன் குறைபாடுடையவனாகத் தோன்றினும், சிலவிடங்களில் (அவனது இயல்பான வெறித்தன்மையால்) முறை பிறழ்ந்தமை தவிர, மற்றப்படி, அன்று நிலவிய சில மரபுகளை யொட்டியே பாடல்களை அமைத்திருப்பதாகத்தோன்றுகின்றது.

வள்ளுவனது நூல் காவியமன்று. எனவே தனிச்சிலர் (Individuals) செய்கைகட்கும், பலதரப்பட்ட சாதாரண-ஊடல் கூடல் - நிகழ்ச்சி கட்கும் இயற்கையாகவே ஆங்கிடமில்லை. மிகவுயர்ந்தனவும் (Ideal) தேர்ந்தெடுத்தனவும் (Elite) ஆன நிகழ்ச்சிகளையே அவர் கூறிச் செல்கின்றார்.

காப்பியம் படைப்போர் அவ்வாறு செய்யார். கருத்து நுட்பத்தினை விடக் கற்பனைக்கே மிகுந்த இடம் தந்து, பல்வேறு நடப்பு நிகழ்ச்சிகளையும் சித்தரிப்பர். மனித இயல்பின் (Human nature) வெளியிடச் சற்று நாணந்தரும் சில கூறுகளையும் காவியங்களிற் கண்டு, மனதுக்குள் நகைத்துக்கொள்கின்றோம் நாம். காவியம் படைப்போர் தாங்கள் எடுத்துக்கொண்ட பொருளின் சிறிதும் பெரிதுமான வளைவு, வண்ணங்களையும்(Different Shades and Colours) சித்தரிக்கவேண்டியதாகின்றது. காவிய மரபு அவ்வாறு. கம்பனும் இந்தப் பிரிவில் சேருகின்றான். எனவே, வள்ளுவக் காட்சிகளினும் கம்பன் தரும் காட்சிகள் சுவைக்குறைவினவாயினும், இரண்டினையும் பொதுவைத்து ஒப்புநோக்குதல் முறையா என்ற ஐயம் எழுகின்றது.

(எனினும் தங்கள் கருத்தின் வேர்நுட்பத்தினை யான் அறியாமலிருக்கவில்லை. நான் கூறுவது தவறென்று படுமாயின் எனது தவற்றினை எடுத்துக்காட்டி தங்கள் கருத்துக்கும் விளக்கம் தந்து எனக்கு எழுதுவீர்களாயின்மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன்.)

எனினும், கம்பனின் 'பண்பு வழு' இடங்கள் உண்டு: எடுத்துக் காட்டாக, எதனைக் கண்டாலும் பெண்டிர் உறுப்பே நினைவுக்கு வருதல்! இராமன் அநுமனிடத்தும், தன் மனைவியின் மறைவுறுப்பு விளக்கம் தரல்போலப் புனைந்துரைத்தல் போன்றன. இவற்றைத் தென்றலில் வெளியிடுதல் நலம்.

இலக்கியத் தென்றல் ஏறு நடை பயின்று வெற்றி கொள்க!

அன்பன்
ம. தங்கப்பா
கோபாலசமுத்திரம்,

[-நண்பரது நுண்ணறிவு எனக்கு மகிழ்ச்சி தருகிறது. ஒரு நல்ல ஆய்வாளருக்கான பண்பு, நண்பரின் கடிதத்தில் காணப்படுகிறது. ஆகவே, இக்கடிதத்திற்குப் பதில் தரவேண்டியவனுகிறேன்.

முதலில், எனது நோக்கத்தைத் தெளிவுபடுத்த விழைகிறேன். கம்ப காவியம் ஆரியக் கருக்கொண்டு இயங்குவதால்,கவிதை வழிதப்பிக் குற்றத்திற்கு ஆட்படுகிறது என நான் கருதுகிறேனே அன்றி, கவிதைக் குற்றத்தைக் கொண்டு ஆரியக் கருவினைக் கண்டுபிடிக்க முயன்றேனில்லை. ஆகவே, மொத்தக் கருத்தான 'ஆரியக்கரு' என்பதற்கு, இக்கவிதைக் குற்றங்கள் துணைபுரியும் என்றே நம்புகிறேன். ஒரு கதையை இழையாகக் கொண்டியங்கும்காப்பியம்,காப்பியமரபினை முதலாகக் கவனித்தல் ஏலாது. முதலில், பாத்திர மரபு - அந்த மரபு ஒவ்வொரு பாத்திரத்திலும் எச்சரிக்கையாகக் கவனிக்கப்பட்டு அமைக்கப்படும்போது, அவற்றின் கூட்டுச் சேர்க்கையே காப்பிய மரபை உண்டாக்கும். ஆகவே, பாத்திர மரபுதான் காப்பிய மரபின் தாய் என நான் கருதுகிறேன்.

வழிநெடுக, காப்பியத்தில் வரும் ஒருத்தியின் குறை நிறைகளை, தனிப்பட்ட 'சில்லறைப்' பாத்திரங்களோடு-உருவத் தெளிவற்றவையோடு ஒப்பிட்டுப் பார்த்தல், ஒப்பு நோக்குத் திறனாய்வுக்கு முறையானதல்ல என்றாலும், கவிஞர்களின் இதயங்களை வைத்துக் கொண்டு, அவற்றை அனுகமுடியும். கற்பனை, மனத்தின் பிரதிபலிப்புத்தான். காவியத்திற்கோ தனிச்சிறு அமைப்புக்கோ இது புறம்பன்று.

ஏதேனும் ஒரு நடப்புக்கு - மரபுக்கு- பழக்க வழக்கத்திற்கு உடன்பாடான மனம், அதை ஒட்டித்தான் கற்பனை செய்கிறது. ஆகவேதான், கவிஞனின் இதயங்கண்டு, சொல்லப்பட்ட கருத்தினை நான் அனுகுகிறேன். நிற்க;

'மார்பில் உதைப்பது' என்கிற சொற்றொடர், "உள்ளுணர்வைத் தாக்குதல்" எனும் பொருளிலும் கையாளப்படுவதுண்டு. "சரியான அடி கொடுத்தான்!" "சூடு கொடுத்தான்" என வழங்கும் சொற்றொடர்கள், எப்படி, மேனியைக் கூறாமல், சொல்லை அல்லது செயலைக் கூறுகின்றனவோ, அப்படியே, மேற்குறிப்பிட்ட சொற்றொடரும், உள்ளத்தைப் பற்றிக் கூறுவதாகக் கொள்ளல் ஏலும். இதனை வைத்துப் பார்த்தாலும், கம்பகாவியத்தில் வரும்'கொள்ளைப் போர்' என்ற பாடலில் இந்த உள்ளுணர்வுக்கு இடமில்லாமல், நேரடி மார்பே கூறப்படல் தெரிய வரும். இதுபோன்று, புறமார்பையே குறித்து வரும் பாடல்கள் வேறு சில தமிழ்க்காப்பியங்களில்- கவிதைகளில் உண்டு என்பதை நான் ஒப்புகிறேன். ஆனால், அவற்றைத் தமிழ் மரபு என ஏற்க மாட்டேன். அது வடமொழி மரபின் தமிழ் நுழைவு என்றோ கலப்பு மரபின் குழந்தை என்றோ தான் கருதுகிறேன். சங்க இலக்கியங்கள் ஐம்பெரும் காப்பியங்கள்-முதலிய வற்றில்'பெரும்பாலான'வை கூறும் மரபுகள்தான் தமிழ் மரபுகள் என நான் நினைக்கிறேன். காலத்தால் முற்பட்ட வள்ளுவனை, நான் கம்பனேடு ஒப்பிடத் துணிந்ததற்கு இதுதான் காரணம்.

மற்றும், நண்பர் குறிப்பிட்டிருக்கும், கொங்கையொடு 'இளைத்து தலில்' என் பாதை, தெளிவாகவே இருக்கிறது. முத்தொள்ளாயிரப் பாடல் (29), தலைவி நெஞ்சொடு இளைத்தும்போது, கொங்கை பற்றிக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளதே அன்றி, கொங்கையையே விளித்து, வினவியதாக, விளக்கங் கொடுத்ததாக இல்லை. அப்படி வரும் மரபும் தமிழ் மரபல்ல என நான் துணிகிறேன். "எந்த விதியை வைத்துக் கொண்டு நீ தமிழ் மரபைக் கண்டு பிடிக்கிறும்?" என நண்பர் வினவக்கூடும். "கவிஞர்கள், காப்பியங்களில் அதிநாடக அமைப்பு (Melodramatic) க்கே வரும்போது கூட, ஒன்றை இரண்டாக்கிக் கவி மிகைப்பாடு காட்டலாமே தவிர, ஒன்றை, திடீரென்று நூறுக்கிக் காட்டக்கூடாது." - இந்த ஓரளவு கவி மிகைப்பாடு உள்ளவைதான் தமிழ் மரபுக்கு ஒத்தவை என நான் கருதுகிறேன். அந்த விதியை வைத்துக்கொண்டு தான் ஒவ்வொன்றையும் நெருங்குகிறேன்.

"நான் கருதுகிறேன்" - ஆமாம்; முடிந்த முடிபே இதுவாக இருக்க வேண்டுமென்று ஆணி அடிக்க வில்லை. இருந்தால், மகிழ்வேன்."

ஆ—ர்]

◉

ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம், சென்னை நகரத்திலுள்ள சலூன்களுக்கு (க்ஷவரக் கடை) சென்னை நகரசபை சில ஆண்டுகளாக மூன்று நாற்காலிகளுக்கு ஐந்து ரூபாயாகவும், அதற்குமேலுள்ள ஒவ்வொரு நாற்காலிக்கும் இரண்டு ரூபாயாகவும் லைசென்சு கட்டணம் விதித்திருக்கிருர்கள்.

இதற்குமுன் மூன்று நாற்காலிகளுக்கு ஒரு ரூபாயாகவும், அதற்கு மேலிருந்தால் நாற்காலி ஒன்றுக்கு ஒரு ரூபாயாகவும் லைசென்சு கட்டணம் இருந்து வந்தது.

ஆரம்பத்தில், சலூன்களுக்கு, சென்னை நகரசபை இலவச லைசென்சு வழங்கி வந்துள்ளதாகவும் தெரிகிறது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பொது மக்களின் சுகாதார நலனைக் கருதியும், தொழிலுக்கு இழிவில்லை என்ற பெருநோக்கோடும்தான் மருத்துவர் சமூகத்தார்கள் இன்றளவும் இத்தொழிலை விடாது செய்துவருகிருர்கள். க்ஷவரத் தொழில் இழிவானதென்று கருதியே,மற்ற சமூகத்தினர்களும், பிற தொழிலாளர்களும் இத்தொழிலைக் கைக்கொள்ள யாரும் முன் வரவில்லை.

மற்றவர்களால் கேவலமாகக் கருதி ஒதுக்கப்பட்ட தொழிலை விடாது செய்துவரும் சலூன்களுக்கு, லைசென்சுக் கட்டணம் உயர்த்தியிருப்பது நியாயமாகாது.

தற்சமயம்,சென்னை நகர சலூன்கள் லாபகரமாக நடைபெறவில்லை. வருமானம் அன்றுடம் வயிற்றைக் கழுவக்கூடப் போதவில்லை.

மேற்கூறிய காரணங்களை உணர்ந்த மதுரை, கோவை நகர சபைகள் அங்குள்ள சலூன்களுக்கு நியாயமான முறையில்,லைசென்சுக் கட்டணங்களைக் குறைத்திருக்கின்ருர்கள்.

சென்னை நகர சபையும், சென்னை நகர சலூன்களுக்கு லைசென்சு கட்டணம் உயர்த்தியிருப்பதை, ஏற்கனவே இருந்த அளவிற்கு குறைக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

டாக்டர் ந. சிவானந்தம்
சென்னை ஜில்லா மருத்துவர்சங்கம்

இலக்கியப் போட்டி

ஆசிரியர் கண்ணதாசன் நவ-7-நதேதி இலங்கை போக இருப்பதாலும் 6-ந் தேதியன்று சென்னையில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டமிருப்பதாலும் 6-ந் தேதி நடைபெற இருந்த தென்றல்-இலக்கியப் போட்டியின் பரிசளிப்பு விழா ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. ஆசிரியர் இலங்கையிலிருந்து திரும்பியதும் விழா சிறப்புற நடத்தப்பெறும்.

இலக்கியத்தில்

பாண்டியன் உலா வருகிருன். அவனைத் தாங்கி வருவது ஒரு பெண் யானை. அதன் முதுகிலே அவன் கம்பீரமாக அமர்ந்திருக்கிருன்.

அந்த மீன்கொண்ட கொடியானை, வேல்கொண்ட கரத்தானை, மீனும் வேலும் காண நாணும் விழிகொண்ட பாவை ஒருத்தி, தான்கொண்ட காதல் தணியும் வரை--அவன் காணுதபோது--காண விழைகிருள். "குலங்காவல் கொண்டொழுகுங் கோமகனை, என பெண்மை நலங்காவல் கொண்டொழுக, நத்தி வருவானு?" என்று எண்ணி எண்ணி, "வந்தான்" என்றதும் கண்டு களிகொள்ள விழைகிருள். ஆனல்...ஐயகோ! அவளது மனக்கிடக்கையை அறியாத அவள் தாய், கதவைச் சாத்தித் தாளிட்டு விடுகிருள். ''சிற்றிடையாய்! சிறையிற் கிட!'' என்று சிறைப்படுத்தி விடுகிருள். கூண்டுக் கிளியாக கோதை தவிக்கிருள். "ஐயோ! பாண்டியன் தெருவைக் கடந்து போய்விடுவானே! எப்படிக் காண்பேன்! என்ன செய்வேன்!" என்று துடிக்கிருள். முன்னும் பின்னும் நடக்கிருள்--தாயை வசை பாடுகிருள்!

''இந்த, 'பிறப்பிலே கிழவி' என்ன பாடு படுத்துகிருள்! சீ! இவளும் என் தாயா!" என்று முணுமுணுக்கிருள். சத்தம் கேட்கிறது. முரசு முழங்குகிறது. யானை வருமுன்னே, மணி ஓசை வருகிறது. "பாண்டிய மன்னர் வாழ்க!'' எனும் ஒலி முட்டுகிறது! சிறைப்பட்ட சீமாட்டி, "வாழ்க!" என்று தானும் முழங்குகிருள். ஆனல், எங்கே இருந்து? தாளிடப்பட்ட வீட்டிற்குள்ளிருந்து! இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்கும் பாதத்தைப் பூமியில் உதைக்கிருள். சுற்றிச் சுற்றிப் பார்க்கிருள். "ஏதேனும் ஒரு சிறு இடைவெளியாவது அகப்படுமா, பாண்டியனைக் காண?" என ஏங்கும்போது, திடீரென்று அவள் கண்களுக்கு, 'சாவித்துவாரம்' தட்டுப்படுகிறது. ஓடிப்போய் அதிலே ஒரு கண்ணை வைத்துக்கொண்டு பார்க்கிருள்! அவள் வாய், அந்தப் பூட்டுத் துளையைச் செய்து வைத்தவனைப் பாராட்டுகிறது.

"அட புண்ணியவானே! நீ நீடூழி வாழ்வாயாக! உனக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்! நான் பாண்டியனைக் காணவேண்டுமென்றே இப்படி ஒரு துளையைப் போட்டு வைத்திருக்கிருயே அப்பா!" --என்று பலவாறு பாராட்டுகிருள்.

காப்படங்கென் றன்னை
கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி
யடைத்தபின்—மாக்கடுங்கோன்
நன்னலங் காணக்
கதவந் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

— 49 —

''என்னைகொல்!''--என்ன உண்டு! இதில் தலைவியின் மனத்தை முழுக்கப் பதியவைக்கிருன், கவிஞன். அவ்வளவு பெரிய உதவி-அவளுக்கு-அந்தத் தச்சர் செய்த சிறு துளை!

இப்படி, அவள், இடைவெளி கண்டு, அதன் வழியே, பாண்டியனைப் பார்த்துத் தீர்க்க நினைக்கும் போது, யானை வரும் ஒலி அதிகம் கேட்கிறது. ஐயோ! யானை வேகமாக அல்லவா வருகிறது! ஒரு விநாடியில் உருவம் மறைந்து விடுமே!--தலைவி குழம்புகிருள்.

பாண்டியன் ஏறி வருவது பெண் யானையல்லவா? ஆகவே பெண்ணுக்குப் பெண் என்ற முறையில் வேண்டுகோள் விடத் தீர்மானிக்கிருள். சீக்கிரம் மறைந்துவிடக் கூடாது என்பதோடு, அந்த யானை தூரத்திலும் போய்விடக் கூடாதல்லவா? அதற்காக, முதல் வேண்டுகோளாக, ''என் பலகணிக்குப் பக்கத்தில் நட'' என்னும் வேண்டுகோளை விடுக்கிருள். யானைக்குக் கேட்குமா? கேட்காது! ஆனுலும், அவள் கெஞ்சுகிருள்! காரணம்...! சொல்லித் தெரிவதோ!

துடியடித் தோற்செவித்
தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை
யிரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனெடு
சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட.

— 50 —

கெஞ்சுகிருள்-யானை அந்த இடத்தைக் கடந்து செல்கிறது! ஒரு விநடி! கண்மூடித் திறப்பதற்குள் சென்றுவிடுகிறது! தலைவி, மதுரை மூதூரை எரியூட்டிய கண்ணகியனைச் சினக்கிருள்! ''சிச்சீ! நீயும் ஒரு பெண்ணுயிருந்தும், என் நிலை தெரியாமல் இப்படி ஓடிவிட்டாயே! உன் பெண்மையையே நான் சந்தேகிக்கிறேன்! நீ, பெண்ணுருவங்கொண்ட யானையே தவிர, காதலுக்குத் தோதான-பண்பட்ட-காதல் உணர்ச்சியுடைய-பெண்மை உடைய-யானையன்று!"-என்கிருள். தன்னைத் தடுத்த, தாயின் 'இளம் பருவ'த்தையே சந்தேகித்த தமிழ்ப் பெருமாட்டி, வேகமாகச் சென்றுவிட்ட காரணத்தால், பெண் யானையின பெண்மையையே சந்தேகிக்கிருள்.

(10-ம் பக்கம்)

தீண்டினால் திருநீலகண்டம்

- கண்ணதாசன் -

கணவன் தாசிவீடு சென்ருன்; வந்தாரிடம் மயங்கி வருவாரை வழி பார்த்து நிற்கும் அந்தத் தாசி, அவனைப் பள்ளிக்கழைத்தாள்; பஞ்சணையில் அமர வைத்தாள்; வெற்றிலை கிள்ளிக் கொடுத்தாள்; வேண்டும் கனி தந்தாள்; தங்கப் பதுமையென மலரணையில் சாய்ந்தாள்; பொங்கி வரும் காமத்தைக் கண் வழியே கொட்டினுள்; அந்த சிங்க வடிவினனின் முகத்தைத் தன் முகத்தில் சேர்த்தாள்; கிள்ளினுள்; துள்ளினுள்; கிளர்ச்சி பெற வைத்தாள்! பின்...?..."வெள்ளத்திணேடொரு வெள்ளமுமாய், அவர் வீணையும் நாதமுமானுர்'' ''கலவி நடுப்பாதியிலே காதல் பேசினர்;'' ''ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவரெனும் தோற்றமின்றி மகிழ்ந்தார்.'' ''ஈரிரண்டு நான்கு பூக்கள் புல்லிதழிற் போயொடுங்க, தலை மறந்து பூரித்தார்'' நலம் பாடி இரவு சென்றது-பொழுது விடிந்தது.

வேண்டும் போதின்பம் விளைக்கும் அந்த மடந்தையைவிட்டு, கணவன், வீடு திரும்பினன். நாணுகின்ற பெண்ணுள் - நலம் பாடும் கிள்ளைமொழி - தேன்சொரியும் மலரினத்தாள் - தித்திக்கும் செங்கரும்பு - ''வருவார் கொழுநர் எனத் திறந்தும், வாரார் கொழுநர் என அடைத்தும்,'' திருகும் குடுமி தேய, வழி பார்த்த விழியும் ஓய, கால்கள் தள்ளாடிச் சாய, மலரணையில் விழுந்து கிடந்தாள். கணவன் கதவைத் தட்டினுன். கண்மணி திறந்தாள். உள்ளே வந்த கணவன், தன் நடத்தையை மறைக்க அவளருகில் சென்ருன். சமாதானம் கூறமுயன்ருன். ''கண்ணே''-என்ருன் கனிமொழி பேசினுன். கட்டியணைக்கப் போனுன். அவள் எட்டி எட்டி நடந்தாள். வெட்டிப் பேசாத வேல்விழியாள் அவன் விருப்பத்தைத் தட்டி நடந்தாள். தொட்டுப் பேசி அவளைத் துவளவைத்தால்தான், தன் கள்ளத்தனத்தை அந்தக் கற்பின் செல்வி மன்னிப்பாள் எனக் கருதி, பலவந்தமாகப் பிடிக்கப் போனுன். கண்களில் பொறி பறக்க அந்தத் தமிழ்ப் பெருமாட்டி, அவனைப் பார்த்து ''தூர நில்!'' என்ருள்.

''ஆ! கற்பு என்னுவது? கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன்; கணவன் எங்கே சென்று வந்தாலும் மனைவி அடங்கி நடக்கவேண்டும்; தாசி வீடு சென்று வந்த கணவனை தாள்பணிந்து வரவேற்ருள் கண்ணகி. தாசிவீடு போகக் கணவன் ஆவல் கொள்ள, அவனைத் தலைமேல் தூக்கி தாசி வீட்டுக்குக் கொண்டு செல்லும் தருகு வேலைகூடப் பார்த்தாள் நளாயினி! அதல்லவா கற்பு! எட்டி நில் என்ருளே மட்டிச் சிறுக்கி! கெட்டுவிட்டதே கற்பு, அப்பொழுதே!"-என்று சீறுவர், சினப்பர் ஒருசார் கற்பில் ஊறிய பெரியோர்! ஆனல், தீண்டாதே என்று தன் கணவனுக்கு ஆணையிட்ட அந்தத் தலைவிதான் சீர்திருத்த யுகமும் ஒப்புக்கொள்ளக்கூடிய மாபெரும் கற்பினள்! கண்ணகியின் கற்பு தங்கம் என்ருல் இந்தத் தலைவியின் கற்பு வைரம் பதிக்கப்பட்ட தங்கம்.

'' கற்பு நெறியென்று சொல்லவந்தார்-இரு
கட்சிக்கு மஃது பொதுவில்வைப்போம் ''

—என்ருன் பாரதி. அதைத்தான் செயலில் காட்டினுள் நான் குறிப்பிடும் தலைவி, அவள் ஏகம்பவாணனின் மனைவி. இன்தமிழ்ப் புதல்வி. கற்பின் தலைவி. பொற்பின் செல்வி.

வேண்டிய போதின்பம் விளைக்கும் மடந்தையரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே-பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவதெலாஞ் சொல்!

—என்ருள். ' முகம் பார்! தடையில்லை. ஆனுல் தொடாதே! உன் கை, வேண்டிய போதின்பம் விளைக்கும் மடந்தையரைத் தீண்டிய கை! நான் உன்னையே எண்ணி, உன்கரம் பற்றி ஒரு துளி நினைவும் வேறுபுறம் செல்லாமல் உன்னுடன் வாழும் உத்தமி. களங்கத்தில் பட்ட உன் கரம் என் களங்கமற்ற மேனியைத் தொட அருகதையற்றது. சொல்லவேண்டியதை எட்டி நின்று சொல். நீ கெட்டுப்போனவன்''-என்ருள்.

பெண் கெட்டால் ஏற்க மறுக்கிறதே சமுதாயம்; ஆண் கெட்டால் மட்டும் எப்படி ஏற்பது? விவாதத்திற்கு வந்தாலும் இது தங்கும்; தலைதூக்கி நிற்கும். இந்தக் கற்பு கண்ணகியின் கற்பைப்போல் அடங்கி நடக்கக்கூடிய கற்பு. அதே நேரத்தில் கணவனிடம் களங்கம் கண்டால் ஆணையிடும் கற்பு. இப்படி ஒரு அன்னை இருந்தது-இருந்ததாகக் காணப்படுவது தமிழ்ப் பண்பாட்டுக்கே பெரும் சிறப்பு.

வேங்குடித் திருவிழா

அம்பிகாவை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய் தங்கவைத்து, விபரமாகப் பேசவேண்டுமென்றுதான் சுந்தரம் அவளைத் தேடிச் சென்றான். ஆனால் ஒரு புதிய பாதை அவனை வரவேற்று போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய்ச் சேர்த்தது. அவன் இதுபோன்ற விவகாரங்களுக்குப் புதியவன். அம்பிகாவின் போட்டோவை வைத்துக்கொண்டு போலீசார் தேடியது, நினைக்க நினைக்க ஒரு புதிராகவே இருந்தது அவனுக்கு. அம்பிகாவைப் பற்றி மோசமான கணக்குப் போட அவன் மனது இடம் தரவில்லை. எதற்கும் அம்பிகாவிடமே கேட்டுவிடலாம் என்கிற எண்ணத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டிருந்தான்.

போலீஸ் ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர், அவர்கள் இருவரையும் இரண்டு நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு, ரிக்கார்டுகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். சுந்தரமும் அம்பிகாவும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். திடீரென்று சப் இன்ஸ்பெக்டர் அம்பிகாவைப் பார்த்து "ஏம்மா, அர்த்தமில்லாமே இதுமாதிரி ஆசாமிகளோடு ஓடி வந்திடுறீங்க? உங்க காதல்லே எங்க உயிருல்ல போகுது?" என்றார். சுந்தரம் அம்பிகாவைப் பார்த்தான். அவன் மனதிலே ஏதோ ஒரு புதிய உணர்ச்சி புகுந்துகொண்டது. அதே உணர்ச்சியைக் குழப்பத்தோடு பெற்ற அம்பிகாவும் சப் இன்ஸ்பெக்டருக்குப் பதில் சொல்லாமல் பேசாமலிருந்தாள். ஒரு உறவுமில்லாத இருவருக்கு ஊர் வதந்தி தொடர்பு ஏற்படுத்தி விடுவது போல, சப் இன்ஸ்பெக்டரின் வார்த்தை அம்பிகாவுக்கும் சுந்தரத்திற்குமிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திக் காட்டியது. அம்பிகா சற்று நிதானித்துக் கொண்டு, சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "நாங்கள் காதலர்கள் அல்ல" என்றாள். சப் இன்ஸ்பெக்டர் சிரித்து, "ஏன்? அதுக்குள்ளே கசந்துபோச்சா?" என்று கேட்டுவிட்டு இரண்டு காகிதங்களை அவர்களிடம் நீட்டி, கையெழுத்துப் போடச் சொன்னார். அம்பிகா கையெழுத்திட்டாள். சுந்தரமும் குழப்பத்தோடு கையெழுத்திட்டான். காகிதத்தை வாங்கி மாறி மாறிப் பார்த்த சப் இன்ஸ்பெக்டர், "ஏய்! என்ன பொய்க் கையெழுத்துப் போடுறே? உன் பெயர் பாலனில்லே?" என்று சுந்தரத்தை அதட்டினார். அம்பிகாவுக்கு சப் இன்ஸ்பெக்டரின் வார்த்தை புரிந்தது. தன்மீதும் பாலன்மீதும் தன் தாய் போலீசில் புகார் கொடுத்திருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள அம்பிகாவுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. சுந்தரம் குழம்பினான். பிறகு, தன் வீட்டில் அம்பிகா தன்னிடம் சொன்னதை வைத்து சப் இன்ஸ்பெக்டரின் கேள்வியை ஒப்பிட்டுப் பார்த்தான். அம்பிகா, பாலன்–இருவரைப்பற்றியும் ஓரளவு புரிந்துகொள்ள அது அவனுக்கு உதவிற்று. சப் இன்ஸ்பெக்டர் கடுகடுப்பாக -- "மரியாதையா சொந்தக் கையெழுத்தைப் போடு!" என்றார். சுந்தரம் இப்போது ஒரு முடிவுக்கு வந்தான். தானல்ல பாலன் என்பதை வெளிப்படுத்தினால் போலீசார் பாலனைத் தேடுவார்கள். பாலன் கைது செய்யப்பட்டால் தன் தங்கை மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்துவிடுவாள். ஆகவே, தானே பாலன் என்று காட்டிக் கொள்வது என முடிவு கொண்டான். சிறிது கூடத் தயக்கமின்றி ஒரு புதிய காகிதத்தை வாங்கி அதில் பாலன் என்று கையெழுத்துப் போட்டான். அம்பிகா தடுத்துப்பேச வந்தவள், வாய்மூடி மௌனியானாள். சப் இன்ஸ்பெக்டர் ஹெட் கான்ஸ்டபிளைப் பார்த்து "ராத்திரி வண்டியிலே இவுங்களை மெட்ராசுக்குக் கொண்டு போகணும்; இப்ப லாக்கப்பிலே வச்சுரு" என்றார். சுந்தரமும் அம்பிகாவும் லாக்கப்புக்குக் கொண்டு போகப்பட்டார்கள். சுந்தரம், இந்தச் செய்தி தன் பெற்றோர்களுக்குத் தெரியாமலிருக்கவேண்டுமென்று ஆசைப்

6

பட்டான். தெரிந்தால் தன்னைப்பற்றிய உண்மை புலனாகி பழையபடியும் போலீசார் பாலனைத் தேட ஆரம்பிக்கலாம். அதோடு அம்பிகா தனிமையிலே லாக்கப்பில் இருக்கவும் நேரிடலாம்--என்று சிந்தித்துக்கொண்டே லாக்கப்புக்குள் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். அம்பிகா சுந்தரத்திடம் அவனது பெற்றோர்களுக்குச் செய்தி அனுப்புவதைப் பற்றிக் கேட்டாள். சுந்தரம் மறுத்து விட்டான். எப்படியும் கோர்ட்டில் உண்மை புலனாகத்தானே வேண்டும் என்று கருதிய அம்பிகா சுந்தரத்திடம் கண்டிப்பாகப் பெற்றோர்களுக்குச் செய்தியனுப்பி விடுதலையாக முயற்சிக்கும்படி வற்புறுத்தினாள்.

சுந்தரம் ஒரே அடியாக, நடப்பது நடக்கட்டும் பேசாமலிரு என்று கூறிவிட்டான். அதற்குள் போலீசார் சென்னைக்கு 'ட்ரங்க் கால்' போட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசி முடித்ததும் சப் இன்ஸ்பெக்டர் இரண்டு பேருக்கு முதல் வகுப்பு ரயில் வாரண்ட் எழுதினார். மாலை 7 மணிக்கு இந்தோ-சிலோன் எக்ஸ்பிரசில் இருவரையும் ஏற்றி இரண்டு போலீசார் துணைக்கமர்ந்தார்கள். சுந்தரம் புதுக்கோட்டைவாசி யானாலும் வெகுநாட்கள் தமிழ்ப் படிப்புக்கென வெளியூர்களில் இருந்ததால் அதிகம் பேரை புதுக்கோட்டையில் பழகிக் கொள்ளாமலிருந்தான். அதோடு, கூட வந்த போலீசாரும், அவனையும் அம்பிகாவையும் கைதிகள்போல் நடத்தாததால் யாரும் அவர்களை அதிகம் கவனிக்க வில்லை. ஆகவே சின்னப்ப பிள்ளைக்கும் மங்கையர்க்கரசிக்கும் விஷயத்தைக் கண்டு சொல்வோர் இல்லாமற் போய்விட்டது.

ரயிலில் முதல்வகுப்பு அறை இரண்டே படுக்கைகள் கொண்டதாக இருந்தது. ஒன்றில் சுந்தரத்தையும் அம்பிகாவையும் உட்காரவைத்து விட்டு, மற்றொன்றில் போலீசார் இருவரும் அமர்ந்தார்கள். தாங்கள் கைதிகளாக இருந்தும் தங்களை முதல் வகுப்பில் அழைத்துக் கொண்டு போவது வியப்பாக இருந்தது சுந்தரத்திற்கு. மெதுவாகப் போலீசாரிடம் அதுபற்றி வினவினான். அவர்கள் சொன்ன தகவலிலிருந்து மூன்றும் வகுப்புப் படிதான் சர்க்கார் கொடுப்பதாகவும், பாக்கியை அம்பிகாவின் தாயோ யாரோ கௌரவத்தை முன்னிட்டுக் கட்டியிருப்பதாகவும், சப் இன்ஸ்பெக்டர் டெலிபோனில் பேசியது அது விஷயமாகத்தானென்றும் தெரியவந்தது.

போலீசார் அவர்களிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டார்கள். அந்த அன்புக்குக் காரணம், அவர்கள் முதல் வகுப்புக்குத் தகுதியுடையவர்கள் என்பதுமட்டுமல்ல; வாழ்வின் மேடுபள்ளங்களைத் தாங்களும் அறிந்திருந்தது ஒரு காரணமாகும். சுந்தரம், அவர்களிடம் கூட, தான் பாலன் என்றே சொல்லி வந்தான். அவனது அந்தத் தியாக உணர்ச்சி அம்பிகாவின் இருதயத்தைத் தொட்டது. திடீரென்று ஒரு போலீஸ்காரர் சுந்தரத்தைப் பார்த்து, "ஏன் சார், இந்த அம்மாவும் நீங்களும் ஓடிவந்து எட்டு நாளைக்கு மேலே ஆச்சு என்கிறாங்க, இன்னும் இந்தச் செய்தி 'தினக்கலை'யில் வரல்லியே? ஓடிப்போற செய்தியெல்லாம் அதிலே உடனைக்குடனே வந்திருமே!" என்று கேட்டார். சுந்தரம் சிரித்துக் கொண்டே, "நாளை வரலாம்" என்று பதிலளித்தான்.

ரயில் திருச்சி சந்திப்பில் வந்து நின்றது. போலீசார் இறங்கி, அவர்களுக்குச் சாப்பாடு வாங்கி வந்து கொடுத்தார்கள். அந்த அன்பு, சுந்தரத்திற்கு அளவு கடந்த மகிழ்ச்சியைத் தந்தது. "பயங்கரமானவர்கள் என்று கருதப்படுகிற போலீசாரில் சிலருக்கு எவ்வளவு நல்ல இதயமிருக்கிறது. அரசாங்கத்தின் கொடுமைகள் அதிகரிக்க அதிகரிக்க, சாதாரண மக்களிடத்திலே போலீசாருக்குப் பற்றுதல் அதிகமாகிறது. ஆகவே ஒவ்வொரு புரட்சிக்குப் பெருந்துணை

யாக அமைந்து விடுகிறது.” இவ்வாறு சுந்தரம் எண்ணமிட்டுக்கொண்டே சாப்பிட்டான். அம்பிகா அவனுக்குப் பரிமாறிக்கொண்டே தானும் சாப்பிட்டு முடித்தாள். சிகரெட் வேண்டுமா என்று ஒரு போலீஸ்காரர் கேட்டதற்கு, சுந்தரம், “நன்றி- பழக்கமில்லை” என்று இரண்டு வார்த்தைகளில் பதிலளித்தான். இருபதாம் நூற்ருண்டில் ஒரு அதிசய மனிதனைப் பார்த்து விட்டதுபோல் போலீசார் சிரித்துக் கொண்டார்கள். பிளாட்பாரம் அல்லோலகல்லோலப் பட்டது. முதல் மணி அடித்தது. பிளாட்பாரத்தில் நின்று சாப்பிட்டுக் கொண்டிருந்த பலரும் வண்டியிலேறினுர்கள். ஏராளமான போலீசார் பிளாட்பாரத்தில் நடைபோட ஆரம்பித்தார்கள். சுந்தரம் ஆச்சரியத்தோடு என்ன நடக்கிறதென்று எட்டிப் பார்த்தான். ஒருவரைக் கூப்பிட்டு என்ன விசேஷம் என்று விசாரித்தான். யாரோ ஒரு மந்திரி உறையூரில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு குப்பைத் தொட்டியைத் திறந்து வைத்து விட்டு சென்னைக்குத் திரும்புவதாகத் தெரிந்து கொண்டான். மந்திரி வந்தார். தனிப் பெட்டியில் ஏறிக்கொண்டார். இரண்டாவது மணி அடித்தது. வண்டி புறப்பட்டது. சுந்தரத்திற்கும் அம்பிகாவிற்கும் காவலாக வந்த போலீஸ்காரர்கள் தாங்கள் வெளி நடைபாதையில் படுத்துக் கொள்வதாகச் சொல்லி அவர்களைக் கதவைச் சாத்திக்கொள்ளச் சொன்னுர்கள்.

சுந்தரம், “ஏன் நீங்களும் உள்ளேயே படுத்துக் கொள்ளுங்கள்” என்ருன்.

“இல்லை. வெளியிலேயே படுத்துக் கொள்கிருேம். நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க சார். உலகத்திலே ஆயிரம் நடக்கும். ஒவ்வொன்றுக்கும் கவலைப்பட ஆரம்பிச்சா தினம் செத்துச் செத்துப் பிழைக்க வேண்டியதிருக்கும். ஆறிலும் சாவு நூறிலும் சாவுன்னு துணிச்சல் வந்திடுச்சுன்னு சஞ்சலமே இல்லை. நீங்க பாட்டுக்கு ஜாலியா பேசிக்கிட்டே வாங்க. ரயில் செஞ்ச புண்ணியவான் முதல் வகுப்பையாவது வீடுமாதிரி கட்டி வச்சிருக்கிருன். நாங்க ஏன் தொல்லை கொடுக்கனும்? நீங்க குஷியா இருங்க!’ என்று கூறிவிட்டு ஒரு போலீஸ்காரர் சுந்தரத்தின் பதிலை எதிர்பார்க்காமலேயே கதவைச் சாத்திக் கொண்டார். தவருன முடிச்சை அன்போடு போட்டு வைத்துவிட்டு விடைபெற்றுக் கொண்ட அந்தப் போலீஸ்காரரை நினைக்கும்போது சுந்தரத்திற்கு சிரிப்பாக வந்தது. சிரித்துக்கொண்டே ஒரு படுக்கையில் அமர்ந்தான். அம்பிகா மௌனமாக அவன் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வை என் வரலாற்றைச் சொல்லட்டுமா என்று கேட்பது போல இருந்தது. “வேடிக்கையான உலகம்! எவ்வளவு பெரிய பெரிய விஷயங்களெல்லாம் திடீர் திடீரென்று அர்த்தமில்லாமல் நடந்து விடுகின்றன? ஒவ்வொரு மனிதனும் மற்றவனைப் பற்றித் தப்புக் கணக்கே போட்டு விடுகிருன். யாரும் யாரையும் முழுக்கப் புரிந்துகொள்ளாமலே உலகம் நடந்துகொண்டிருக்கிறது. நல்லவர், கெட்டவர் எல்லாருடைய வாழ்க்கையும் ஒரேமாதிரியாகத் தானிருக்கிறது. இதற்கு என்ன காரணம் சொல்வது?”

-சுந்தரம் அன்றையச் சம்பவத்திலிருந்து இவ்வாறு தத்துவப் பாதைக்கு நழுவினுன். அம்பிகாவும் அந்தத் தத்துவங்களை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டே வந்தாள். அந்தத் தத்துவத்தின் ஏதாவதொரு மூலையைப் பிடித்துக் கொண்டு, தன் வரலாற்றைத் தொடங்கலாம் என்பதே அவள் கவனித்துக் கேட்க ஆரம்பித்ததற்குக் காரணம்.

சுந்தரம் தொடர்ந்தான்: “மனிதவாழ்க்கையின் அடிப்படையையே மாற்றியமைக்க வேண்டும். பிரதி ஒரு மனிதனின் இதயத்திலும் இரண்டு அறைகள் இருக்கின்றன. ஒன்று ரகசிய அறை, மற்ருென்று பகிரங்க அறை. சிலர் பகிரங்க அறையில் வைக்கக் கூடியதை ரகசிய அறையில் வைத்துக் கொண்டு தடுமாறுகிருர்கள்; சிலர் ரகசிய அறையில் வைக்கப் படவேண்டியதை பகிரங்க அறையில் போட்டு பலபேருக்கும் காட்சிக்கு வைத்து விடுகிருர்கள். முன்னவனை, ஊமை ஊரைக் கெடுக்கும் என்கிருர்கள். பின்னவனை ஓட்டை வாயன் என்கிருர்கள். ஆக, எப்படி வாழ்ந்தாலும் தப்பாகத்தானிருக்கிறது. இதற்கு என்ன செய்வது? ஒன்றுக்கு அடுத்து இரண்டு என்பதிலே உலகம் நம்பிக்கை இழந்து கொண்டு வருகிறது. ஒன்றுக்கு அடுத்து மூன்று என்றதாவினுல் பொருமைப்படுகிறது. வாழ்ந்தவன் கெட்டால் வாய் உபச்சாரமாக வருத்தம் தெரிவிக்கிறது. கெட்டவன் வாழ ஆரம்பித்தால் “இவர் இருந்த இருப்பு எனக்குத் தெரியாதா?” என பூர்வ புராணம் பேச ஆரம்பிக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணம் ஒன்றுதான். எல்லாம் தனக்கு வேண்டும், தனக்கு வேண்டும் என்று மனிதன் அல்லாடுகிருன். அதன் காரணமாக நண்பர்களைக் கூட பகைவர்களாக்கத் துணிந்து விடுகிருன். நான் மட்டும் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். எது வந்தாலும் சரி, எது போனுலும் சரி. எப்போதும் ஒரே மாதிரி இருந்து விடுவோம் என்பதுதான் அது. பார்ப்போமே, நம்மை எதிர்க்கச் சிலருக்குத் தைரியம் வரும்போது அவர்களைச் சமாளிக்க நமக்குத் துணிச்சல் இல்லாமலா போய்விடும்! அம்பிகா, எது எப்படி இருந்தாலும் சரி மனதை எப்போதும் கவலையின்றி வைத்துக்கொள்.”

-சுந்தரத்திற்குச் சிரிப்பு வந்தது. “நான் எங்கேயோ போகிறேன். இதை எதற்குச சொல்கிறேன் என்ருல், சிறிது நேரத்திற்குமுன் ஒரு போலீஸ்காரர் சொன்னுரே அதுமாதிரி உலகத்திலே ஆயிரம் நடக்கும். அது ஆயிரம் பேர் வாழ்விலும் நடக்கும். அந்த ஆயிரம் பேர்களில் ஒவ்வொருவனும் தன்னைத்தவிர பாக்கி தொள்ளாயிரத்துத் தொண்ணூற்ருென்பது பேர்களின் வாழ்விலும் தான் நடப்பதாகக் கருதிக்கொள்கிருன். ஒரு கதை; ஒரு கல்யாண வீட்டில் ஐந்து பேர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஒருவன் அந்த ஐந்து பேர் நெற்றியிலும் நாமத்தைப் போட்டுவிட்டு உன்னைத் தவிர நாலு பேருக்கும் போட்டிருக்கிறேன், அவர்களிடம் சொல்லி விடாதே--என்று ஒவ்வொருவராக எழுப்பி, தனியே கூட்டிப் போய்ச் சொல்லி விட்டான். பிறகு அந்த ஐந்து பேரும் ஒருவனைப் பார்த்து ஒருவன் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஏன் தெரியுமா? தனக்கு மட்டுமில்லையாம், மற்ற நான்கு பேருக்கும் இருக்கிறதாம். இதுதான் உலகம். ஆகவே தைரியமாயிரு. உன் வாழ்விலே ஏதோ ஒரு சோகமயமான அடிப்படை இருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறது. அதை எண்ணி எண்ணி உன் மனம் வெந்து கொண்டிருப்பதையும் நானறிகிறேன். அதைக் கேட்க வேண்டுமென்கிற ஆசை வெகு நேரமாக என்னைத் தூண்டிக்கொண்டிருக்கிறது. அதிலே நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யத் தயாராயிருக்கிறேன்.” என்ருன் சுந்தரம். அம்பிகாவின் கண்களிலே கண்ணீர் மல்கியது. சுந்தரம் அவளைப் பார்த்து “முதலில் ஒரு சந்தேகம். கேட்கக்கூடாது என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனுல் என் மனது என்னவோ அதைத் தெரிந்து கொள்ளத் துடிக்கிறது...உனக்கும் பாலனுக்கும்......ஏதாவது நெறி தவறிய உறவு...”

அம்பிகா இடை மறித்தாள்.

“இல்லை. நிச்சயமாக இல்லை. அவர் தொடவுமில்லை: நான் கெடவுமில்லை. என்னைத் தொட முயன்றவர்கள் பலர். கெடுக்க முயன்றவர்கள் பலர். உண்மையைச் சொல்லுகிறேன். நான் நெறிதவறிய ஒருத்தியின் மகள் என்பதைத் தவிர வேறு எந்தக் களங்கமுமில்லாதவள்.”

சுந்தரம் திடுக்கிட்டான். பளிச்சென்று ரயில்வண்டி நின்றது. அந்த அதிர்ச்சியில் அம்பிகா கீழே விழுந்தாள். சுந்தரம் அவளைத் தூக்கி உட்கார வைத்தான். அவன் மேனி புல்லரித்தது. அவளுக்கும் அப்படியே. சுந்தரம் வெளியிலே எட்டிப் பார்த்தான். ரயிலின் முன் விளக்கு வெளிச்சத்தில் ஒரு எருமை தண்டவாளத்தில் கிடப்பதையும் எஞ்சின் டிரைவரும், சிலரும் அதைக் கிளப்பிக் கொண்டிருப்பதையும் கண்டான். அப்போது சுந்தரத்தின் கூட வந்த போலீஸ்காரர்கள் கீழே இறங்கினுர்கள். அது போலவே அடுத்த மூன்ரும் வகுப்புப் பெட்டியிலிருந்தும் இரண்டு போலீஸ்காரர்கள் இறங்கினுர்கள். சுந்தரத்தின் கூட வந்தவர்கள் அந்தப் போலீஸ்காரர்களைக் கண்டதும், “எய் வடிவேலு, என்னடா, எங்கே எஸ்காடு?” என்ருர்கள்.

“மெட்ராசுக்குத் தாண்டா”

“என்ன கேசு? யாரு ஆளு?”

“பொம்பளை கடத்தல் கேஸ்!”

“உங்க ஊர் ஆள் தானு?”

“ஆமாப்பா! பெரிய இடத்துப் பையன்.”

இந்த உரையாடலைக் கேட்ட சுந்தரத்தின் இருதயம் நின்று விடும் போலிருந்தது. ஒரு வேளை பாலன்...?

தொடரும்

★ ★★★ ★

மதுரைக் கல்லூரியில் கண்ணதாசன்

◉

20-10-55 காலை **9-30** மணிக்கு மதுரைக் கல்லூரியில் ஆசிரியர் கண்ணதாசன் ‘கவிஞரும் இலக்கியமும்’ என்பதுபற்றிப் பேசினுர். ஏராளமான மாணவர்கள் குழுமியிருந்தனர். முழுக்க முழுக்கப் பார்ப்பனர் நிர்வாகமும் ஆதிக்கமும் உள்ள கல்லூரியது என்பதும், அதற்கு முன்னுல் நம்மவர்கள் யாரும் அங்கு பேசியதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் அதே கல்லூரியில் ‘சிந்தனையும் செயலும்’ என்பதுபற்றி அருமையானதோர் சொற்பொழிவு நிகழ்த்தி வந்திருக்கிருர்கள்.

★ ★★★ ★

தென்றல் இலக்கியப் போட்டி

★ ★



கடலூர் இசையமுது.
''கல்லக்குடி'' - பெருங்கதை
முதற் பரிசு.



மதுரை ப. நெடுமாறன்.
''தென்பாண்டிவீரன்'' - பெருங்
கதை-முதற் பரிசு.

கண்டாச்சிபுரம் இ. கண்ணப்பன்
''பூங்குழலி'' - காவியம
முதற் பரிசு.

★

வேலூர் கோ. பெ. நாராயணசாமி.
''கொடிமின்னல்'' - காவியம்
முதற் பரிசு.

திருவாரூர் இரா விசுவநாதன்.
''நிலவொளியில்'' - பெருங்கதை
இரண்டாவது பரிசு.

திருவையாறு புதுமதியன்.
''கருகிய மலர்கள்'' - பெருங்கதை-
இரண்டாவது பரிசு.

அறந்தாங்கி அ. வேதாசலம்.
''பாரிமுல்லை'' - காவியம்-
இரண்டாவது பரிசு.

★

உடுமலை தி. பண்ணன்.
''காதல் துறவி'' - காவியம்-
இரண்டாவது பரிசு.

★

மேலைச்சிவபுரி நாக. சண்முகம்.
''எதிர்க்கட்சி'' - பிரசுரிக்கத்
தகுதி பெற்ற நாடகம்.

★

தஞ்சை வி. பாலசுப்ரமணியன்.
''ஆயிரம் ரூபாய்''-பிரசுரிக்கத்
தகுதிபெற்ற நாடகம்.

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிருர்

சுந்தரம், கோவை.

‘இலக்கணம் என்ற சொல் தமிழா வேற்று மொழியா ?

இலக்கணம் என்ற சொல் இலக்கியம் என்ற சொல்லைப் போலவே தமிழ் வழக்கில் உள்ள தமிழ்ப் பண்பு வாய்ந்த சொல். இலக்கு அல்லது குறிக்கோள் இரண்டு சொற்களிலும் முற்பகுதி. வாழ்க்கையை இலக்கியத்தில் இலக்கு வாழ்க்கையாகச் சித்தரிக்க வேண்டும் என்பது தமிழ்மரபு. இதை புலனெறி வழக்கம் என்பர். இது, உலக இலக்கியம் முழுவதும் இன்று பரவியுள்ளது;

இலக்கணம், இலக்கியம் ஆகிய சொற்களின் பிற்பகுதி அணம், இயம் என்பவை. அணம் என்பது கட்டணம் முதலிய சொற்களில் தொழிற் பெயர் விகுதியாகவும் தன்மை என்ற பொருளில் சுட்டு விகுக்களுடன் சேர்ந்து வணம், வண்ணம் என்ற உருவிலும் வழங்குகிறது. இயம் என்பதும் இயல்பு என்ற பொருளுடையதே.

இலக்கணம், இலக்கியம் என்ற வழக்கு அவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்கள் (Grammer, Literature) சமஸ்கிருதச் சொற்கள் (வியாகரணம், சாஹித்யம்) ஆகியவற்றை விட அறிவுப்பண்பு சிறந்தவை.

கே. மணி, சென்னை.

மதத்திற்கும் அரசியலுக்கும் தொடர்புவைத்துக்கொள்ளலாமா?

கூடாது. ஆனாலும் வரலாற்று முறையில் மத அடிப்படையாக அரசியலும் அரசியலடிப்படையாக மதமும் பின்னி வளர்ந்துள்ளன. மதச் சார்பில்லாத அரசியல், அரசியல் சார்பில்லாத மதம் என்பதே நாகரிக சமுதாயத்தின் குறிக்கோளாக இருந்து வருகிறது. அம்முறை ஏற்பட்டு வருகிறது. வருங்காலப் பொதுவுடமை அரசியலிலே தான் இது நிறைவேற வேண்டும்.

பாட்சாமோய்தீன், சேலம்.

புரட்சி என்ற சொல் மனித அகராதியில் புகுந்தது எப்போது ? அச்சொல் தோன்ருதிருந்தால் நமது இன்னறய நிலை எவ்வாறு இருக்கும் ?

1937-ல் வெளியிடப்பட்ட தமிழ்ப் பேரகராதியில் புரட்சி என்பதற்குத் தரப்படும் பொருள்கள் வருமாறு. கிரகப்புரள்வு, கீழ்மேலாய் வருதல், திரும்புதல், பிறழ்வு, இயற்கை மாறுபாடு. இதனோடு இணையபுடைய புரளி என்ற சொல்லுக்கு தரப்படும் பொருள் : குழப்பம், சண்டை, தப்பிதம், துடுக்கு, பொய், வஞ்சனை, குறும்பு, கலகம் என்பன. இத்தமிழ்ச்சொல் புரளி என்பது போல கெட்ட பொருளிலும் புரட்சி என்ற வடிவில் சோதிட இயற்கைப் பொருள்களிலும் மட்டுமே முன்பு வழங்கப்பட்டன. இதன் ஆங்கிலச் சொல் (Revolution) என்பதின் பழம் பொருள்கூட சுற்றுதல், ஒரு முழுச் சுற்று என்பதே. இவற்றின் அரசியல் பொருள் ஆங்கிலத்தில் கூட பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிற்பட்டது. இதற்குச் சரியான தாய் மொழிச் சொற்களுக்கு, இவ்விருபதாம் நூற்றுண்டுத் தொடக்கத்திலுள்ள எல்லாத் தாய்மொழிப் பத்திரிகைகளும் அல்லற்பட்டன. பெருமாற்றம், பிரளயம், புரளி ஆகியவை தொடக்கக் காலமொழி பெயர்ப்பு முயற்சிகள். இறுதியாக வந்த மொழிபெயர்ப்பு ‘யுகாந்திரப் புரட்சி’ என்பது. சுயமரியாதை இயக்கமே முதன் முதலில் இன்றைய அரசியல் பொருளில் இச்சொல்லை வழங்கி அதை “குடி அரசு” பத்திரிகையின் மறுபேராகவும் வழங்கிற்று.

மறுமலர்ச்சி, நாட்டாண்மை, குடியாட்சி முதலிய இன்னும் எத்தனையோ சொற்களை தமிழ் அரசியல் உலகத்திற்குச் சுயமரியாதை இயக்கமும் திராவிட இயக்கமும் தந்துள்ளன; தந்து வருகின்றன.

◉ ◉

இலக்கியத்தில் காதல் ...

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

*“நான் உன்னிடம் நடை கற்கும் போது, மெல்ல நடந்தாய்! இப்போது நல்ல கட்டத்தில் வேகமாக நடக்கிருய் !”--என்று பெருமைப் படுத்தித் தலையில் தட்டுகிருன் ! அதாவது, அந்த யானை, மெதுவாக நடக்கவும் தெரிந்ததாம்-- நடந்து, அவளுக்கு நடை கற்றும் கொடுத்ததாம் ! ஆனால், உடம்பும் உள்ளமும் கொதித்து அவள் உருகும் நேரத்தில், பெண்மையைக் கூட இழந்துவிட்டதுபோல், அந்த யானை நடந்து சென்றுவிட்டதாம்! **“எலாஅ மடப்பிடியே !”** என்கிருள், **“ஏய்”** என்று விளிப்பது போல! ஆத்திரம், அப்படி வருகிறது ! காரணம், காதலுக்கு இடையூறு பாருங்கள் ! உண்கின்ற சோற்றைத் தட்டிவிட்டாலும் ஒரு பருவப்பெண்ணுக்குக் கோபம் வராது ! காதலுக்குத் தடை என்ருல், எள்ளும் கொள்ளும் வெடிக்கும் ! வெடிக்கிறது, பாண்டிய மண்டலப் பச்சைக் கிளிக்கு !*

எலாஅ மடப்பிடியே !
யெங்கூடற் கோமான்
புலாஅல் நெடுநல்வேல்
மாறன்—உலாஅங்கால்
பைய நடக்கவுந்
தேற்ருயால் நின்பெண்மை
ஐயப் படுவ துடைத்து !

— 51 —

கவிஞன், தானே தலைவியாகி உருகுகிருன். இவை, முத்தொள்ளாயிரச் செல்வங்கள்.

◉ ◉ ◉

ஐயோ ! நிறுத்துங்கள் !

அச்சுயந்திரம் மேகவேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. பலகையில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த வெள்ளைக் காகிதங்கள், ஒன்றன்பின் ஒன்ருக யந்திரத்திற்குள் இறங்கிக் கறுப்பாகித் திரும்பிக்கொண்டிருந்தன. முதல் ‘ப்ரூப்’, பக்க ‘ப்ரூப்’, மேஷின் ‘ப்ரூப்’, ஆகிய மூன்று வகைத் திருத்தங்களையும் மூன்றுதரம் செய்துகொடுத்த ஆசிரியர், “யந்திரம் ஓடலாம்” என அனுமதி கொடுத்த ஆசிரியர், மெதுவாக அந்தப் பக்கம் வந்தார். ஓடிக்கொண்டிருந்த பக்கத்தில் ஒன்றை எடுத்து, அழகு பார்க்க ஆரம்பித்தார். ஆகா ! மை என்ன அழகாகப் படிந்திருக்கிறது! ஆசிரியர் அதைத் தூக்கி முகத்துக்கு நேரே வைத்து அழகு பார்த்தார். “இந்த நான்கு பக்கங்களும் மிக அழகாக அமைந்து விட்டன !” என்று முணுமுணுத்தார். பிறகு, தான் எழுதியதைப் படிக்க ஆரம்பித்தார். அவர் மெய் சிலிர்த்தது. “நாமா இவ்வளவு எழுதுகிரேம் !” என்று, பெருமை தாங்கமாட்டாமல் படித்தார்.

படித்துக்கொண்டே வந்தார்—அவர் முகம் கறுத்தது “ஐயோ ! நிறுத்துங்கள் ! நிறுத்துங்கள் !” என்று கூச்சலிட்டார். அச்சுயந்திரம் நிறுத்தப்பட்டது. எல்லோரும் ஓடிவந்தார்கள். ஆசிரியர் அவர்களைப் பார்த்துச் சீறினர். வசைபாடினர். ‘கம்பாசிட்ட’ரைச் கூப்பிட்டார். அவருக்கு புத்தி இருக்கிறதா, இல்லையா என்று வினவினர்.

“இதைப் படித்துப் பாருமையா !” என்று காகிதத்தை அவர் முகத்தில் வீசினர். ‘கம்பாசிட்டர்’ பொறுமையாக, காகிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தார் அவர் முகமும் சுருங்கியது. மன்னிப்புக் கேட்கிற பாவனையில் ஆசிரியரின் முகத்தைப் பார்த்தார். ஒன்றுமில்லை ; ஆசிரியர், கடைசியாக எழுதிக் கோடுத்த இரண்டு வரிகள் கோஞ்சம்—அதில் ஒரு எழுத்து மட்டும்—தப்பாக அச்சாகியிருந்தது.

அவர் எழுதிக் கோடுத்தது இது :

“நாம், கொள்கையை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிரேம்...”

அதில் அச்சாகியிருந்தது இது :

“நாம், கொங்கையை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிரேம்...”

—பத்திரிகாசிரியனின் பெருத்த அவதி, அச்சுப் பிழைதான். எப்படிப் பார்த்தாலும் சில பிழைகள் அவன் கண்களுக்குத் தப்பி விடுகின்றன.

“காணி நிலம் வேண்டும்” என்ற பாரதியின் வாக்கு, ஒரு பத்திரிகையில், **“சாணி நிலம் வேண்டும்”** என்று அச்சாகியிருந்தது.

“கவிஞனின் சொத்து கவிதை” என்கிற வரி, ஒரு பத்திரிகையில், **“கவிஞனின் சொத்து கழுதை”** என்று ‘திருத்தம்’ பெற்றிருந்தது. முந்திப் பிரிட்டன் தேர்தலில், சர்ச்சில் தோற்கடிக்கப்பட்டதை, ஒரு பத்திரிகை, பின்வரும் தலைப்பில் வெளியிட்டது :

“சர்ச்சில் தோல்கடிக்கப்பட்டார்”

ஒரு இலக்கிய மாத இதழில், **“புலவரின் பண்பட்ட நெஞ்சம்”, “புலவரின் புண்பட்ட நெஞ்ச”**மாகக் காட்சியளித்தது. அதே பத்திரிகையில் ஒரு கதாநாயகி, தன் தோழியைக் கதாநாயகனுக்கு காதலனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள், இப்படி ;

“பயப்படாதீர்கள். இவள் என் கோழி !”

—தோழி, அதில் **‘கோழி’**யாகியிருந்தாள். அதே கதாநாயகன், அதே இதழில் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருந்தான் :

“மாதரை மயக்கி விழவைப்பதற்கு, தண்ணி போட்டுக்கொண்டிருப்பான்...”

—**கண்ணி**, அதில் **‘தண்ணி’** ஆகி, மதுவிலக்குக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்தது. ஒரு பத்திரிகையில், குழந்தைகள் தொடர் கதை ஒன்று வந்துகொண்டிருந்தது. ஒரு திருடர் கூட்டத்திற்கும் மன்னன் ஒருவனுக்கும் நடந்த போர்பற்றியது அது. கடைசி இதழுக்கு முந்திய இதழில், “மன்னன் திருடர்களைப் பிடித்தான்” என்று எழுதவந்த ஆசிரியர், “திருடன் மன்னர்களைப் பிடித்தான்” என்று எழுதினர். அப்படியே அது அச்சுவாகனத்திலும் ஏறிவிட்டது. எல்லோரும் படித்துத் திகைத்தார்கள் ; “இதென்னடா இது ! கம்யூனிஸ்ட் மர்மமாக இருக்கிறது !” என்று ஆச்சரியப்பட்டார்கள். அடுத்த இதழ், திருத்தம் கோண்டு வெளி வந்தது.

ஒரு இலக்கிய உரைகாரர், தனது இலக்கிய நூல் ஒன்றிற்கு நன்னூல் சூத்திரம் ஒன்றை எடுத்துக் காட்டி, அதனடியில் **‘நன்னூல் சூத்திரம்’** என்று எழுதிக் கொடுத்தார். அது முதல் ப்ரூப்பில் **‘நன்னூல் ஆத்திரம்’** என்று வந்தது. திருத்திக் கொடுத்தார். அப்போது அது, **“நன்னூல் மூத்திரம்”** என்று வந்தது. மூன்ரும் திருத்தம் செய்து, கண்விழித்து, யந்திரத்தின் அருகில் நின்ருர் ; நல்லபடியாக ஓட ஆரம்பித்ததும்தான் வீட்டிற்குச் சென்ருர்.

‘தென்ற’லின் ஒரு இதழில், கிறித்தவக் கல்லூரிப் பேச்சை வெளியிட்டிருந்தேன். அதன் தலைப்பு, ‘கிறித்தவக் கல்லூரிப் பேச்சு’ என்று போட்டிருந்தேன். அது இப்படி ஆகி நின்றது ;

“கிறித்தவக் கல்லூரிப் போச்சு !”

—கடைசியில் தலைப்பை முழுக்க மாற்றிக் கொடுத்தேன்.

இப்படி அச்சுப்பிழைகள் அவதி கலந்த நகைச் சுவையைக் கிளப்பிவிடுகின்றன, ஆசிரியனுக்கும், வாசகர்களுக்கும் ! விழுந்து விழுந்து திருத்தினலும் ஏதாவதொரு பிழை கண்களுக்குத் தப்பி விடுகிறதே, என்ன செய்ய !

ஏதாவதொரு பிழை இருந்தாலும், “ஓடமாட்டேன்” என்று மறுக்கும் அச்சுயந்திரம், யாரிடமாவது இருந்தால் சொல்லுங்கள் !

— கண்ணதாசன்

◉ ◉ ◉

சிலம்பு வழங்கும் ......

2-ம் பக்கத் தொடர்ச்சி

தெய்வம் நம் நாட்டின் திருமால் அல்லது காமனை நினைவூட்டுவது. இது குடிதேறலையும் கலியாட்டத்தையும் விரும்பும் தெய்வம். மராத்தி நாட்டுக் கணபதி போன்றும் ஆங்கில நாட்டுப் 'பெக்' என்ற நாட்டுப்புறத் தெய்வம் போன்றும் குறும்புக் கோமாளித் தெய்வங்களும் இதில் இடம் பெற்றன. நாடகப்பண்பு இங்கே விரைவில் கோமாளித்தனமும் வசையும் நகைச்சுவையும் கலந்ததாயிற்று.

துன்பியல் நாடகத்தை உயர்குடியினர், செல்வர்களே கண்டு நுகர்ந்தனர். இன்பியல் நாடகத்தையோ பொது மக்கள் தெருக் கூத்தைக் கண்டு களிப்பதுபோலக் கண்டு ஆரவாரித்துக் களித்தனர்.

சமஸ்கிருத மரபு

ஆங்கில நாடகத்துக்கும் கிரேக்க நாடகத்துக்கும் இடைப்பட்ட காலத்தது சமஸ்கிருத நாடகம். கிரேக்க நாடகத்துக்கும் இதற்கும் ஒரு தொடர்பு உண்டு. சமஸ்கிருதத்தில் திரையைக் குறித்த சொல் 'யவனிகா' என்பது. சமஸ்கிருத நாடக காலத் தொடக்கத்தில் கிரேக்கரிடமிருந்தே 'திரை'யிடும் வழக்கம் கீழ்நாட்டில் பரவிற்று என்பர் சில மேனாட்டு அறிஞர். ஆனால், கிரேக்க நாடகத்தில் திரையே கிடையாது என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. இதைக் கண்ட வேறு சில அறிஞர், திரைத் துணி கிரேக்க நாட்டிலிருந்து வந்ததாயிருக்க வேண்டும் என்று திருத்த விளக்கம் தந்தனர். உண்மையில் யவனரின் அழகிய சித்திர வேலைப்பாடுகள் அமைந்த திரையே யவனிகா என்று பெயர் பெற்றிருக்க இடமுண்டு. ஏனெனில் தமிழில் இது எழினி, அதாவது எழில் உடையது என்று பெயர் பெற்றிருந்தது. எழில் என்ற கருத்துடைய ஆகுபெயராக 'யவனம்' சமஸ்கிருதத்தில் வழங்கிப்பின் 'யௌவன'மாக மாறியிருக்கலாம்.

சமஸ்கிருத நாடகங்களில் நாம் எத்தகைய சமயத்துறைத் தொடர்பையும் காணமுடியவில்லை. அதன் கதைகள் பெரும்பாலும் புராணஇதிகாசகதைகளாக இருந்தன. ஆனால் அது கோயில்புரோகிதரால்ஆடப்பெறவில்லை.கோயில்களிலும் ஆடப்பெறவில்லை. அரசர் அவைகளிலும் செல்வர், பண்டிதர் மன்றங்களிலுமே ஆடப்பட்டன. புரோகித வகுப்பு இதில் உயர் இடம் பெற்றது-புரோகிதராக அல்ல, அரசனுடன் தொடர்புடைய உயர்குடியினராக நாடக உறுப்பில் அது உயர் இடம் பெற்றது. ஆனால் தலைமையிடமல்ல, கோமாளியின் இடமும், அரசன் பால் உள் இடமும் மட்டும்.

இன்பியல், துன்பியல் என்ற இரு வேறு கலைகளாக சமஸ்கிருத நாடகம் இயங்கவில்லை! ஆனால் நாடக இலக்கணம் கூறிய ஏடுகள், பத்துக்குமேற்பட்ட நாடகவகைகளைக் குறிக்கின்றன. இவற்றுள் இன்பியல் வகையான களியாட்ட நாடகம் (ப்ரஹஸனம்), நாடகக் காப்பியம் (ச்ராவ்ய நாடகம்), காட்சி நாடகம் (ரூபகம்) ஆகியவை இடம்பெற்றன. ஆயினும் இலக்கியத்தில் பெரிதும் வழங்கிய வகை காட்சி நாடகம் ஒன்றே. அது இன்பியல், துன்பியல் வேறுபாடின்றி, ஷேக்ஸ்பியர் நாடகங்கள்போல் இரண்டும் கலந்தவையே.

ஆங்கில நாடகம் பாட்டாகவோ உரை நடையாகவோ, இரண்டும் கலந்ததாகவோ நாடகாசிரியன் மனம்போல இயங்கிற்று. கிரேக்க நாட்டில் துன்பியல் கவிதையாகவும், இன்பியல் உரை நடையாகவும் இயங்கின. ஆனால் சமஸ்கிருத நாடகங்கள் எங்கும் இடையிடையே பாட்டுக் கலந்த உரைநடையாக இயங்கின. தனிப் பாட்டோ தனி உரை நடையோ கிடையாது.

சமஸ்கிருத நாடகத்தில் காட்சிகள் மட்டுமல்ல: காட்சிகளுக்கு இடையே இடைக் காட்சிகள் (உபாங்கம்), காட்சிகளுக்கு முன்னுரை (ப்ரஸ்தாவனா), பின்னுரை (அவதாரிகா) நாடகத்துக்கே ஒரு முன்னுரை, கடவுள் வாழ்த்து (நாந்தி) ஆகியவை உண்டு. இவற்றுள் சில, கிரேக்க நாடகங்களிலும் இடம் பெற்றவையே. முன்னுரை அங்கே முன்மொழி என்றும் பின்னுரை பின்மொழி என்றும் இடைக்காட்சி இணைக்காட்சி என்றும் வழங்கின.

சமஸ்கிருத நாடகத்தில் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்புக்கள் இரண்டு உண்டு. அதில் நடிக நடிகையரல்லாமல், இன்றைய நாடக நடியாசிரியரை நினைவூட்டவல்ல சூத்திரதாரர் என்ற நாடகத் தலைவர் உண்டு, வாழ்த்தையும் முன்னுரை பின்னுரை, இடைக் காட்சிகளையும் தனித்தோ ஒரு நாடக நடிகருடனே நடிப்பவர் அவரே.

சமஸ்கிருத நாடகத்துக்கே உரிய இன்னொரு தனிப்பண்பு அது பல மொழிகளில் அமைந்துள்ளதேயாகும். ஆடவரில்உயர்ந்தவர் அதாவது அரசர், புரோகிதர், தேவர்கள் சமஸ்கிருதமொழி பேசினார்கள்.ஆடவரில் கீழ் வகுப்பினரும் பெண்கள் அனைவரும் பிராகிருதம் என்ற வட நாட்டு மக்களின் அக்காலத் தாய் மொழிகளில் பேசினார்கள்.

ஆங்கிலம், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய இந்த மூன்று மரபுகளின் பண்புகளையும் மனத்தில் கொண்டால், உலக நாடக மரபின் தொடக்க நிலையை நாம் உய்த்துணரலாம். அம்மூன்று மரபுகளின் தொடக்க நிலையாக மலையாள மரபும் தமிழ் மரபும் விளங்குவது காண்போம். அதுமட்டுமன்று, சிலப்பதிகாரத்தின் நாடகப் பண்பு, முத்தமிழ்ப் பண்பு ஆகியவை அப்பொழுதுதான் முற்றிலும் விளக்கமடையும்.

அம்மூன்று மரபுகளின் ஒப்பீட்டினால் அம்மூலக் கூறுகளைக் காண முயல்வோம்.

(தொடரும்)

குறுக்கு வழி!

"பத்துப்பேரால்வெறுக்கப்படுகிற ஒருவன் அதை மறந்திருக்க வழி என்ன?"

"தன் புகழ் பாடுகிற நான்கு பேருக்கு மத்தியிலே இருந்து கொண்டு அந்த 'ஜால்ரா' சத்தத்திலே மெய் மறப்பது"

— திக்வின்

தமிழ் - திராவிடம்!

தமிழ் என்ற பெயர் திராவிடம் என்ற பெயரின் மரூஉ என்று சில ஆராய்ச்சியாளர் கருதினர். மொழி நூல் மரபில் இம்மாறுதல் இயற்கைக்கு மாறுபட்டதன்று. திராவிடம், திராமிடம், திராமிளம், தாமிளம், தமிளம், தமிழ் என்ற மாறுபாடு புரியக்கூடியதே. ஆனால் நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுச் சான்றுகள் இம்முடிவுக்கு நேர் எதிராயுள்ளன. திராவிடம் என்ற சொல்லுக்கு முற்பட்டே திராமிளம், திரமிளம் என்பனவையும், அதற்கு முற்பட்டே தாமிளம், தமிளம் ஆகியவையும் நமக்கு சமஸ்கிருதக் கல்வெட்டுகளில் கிட்டுகின்றன. மாறுதல் திராவிடத்திலிருந்து தமிழாயிருக்க முடியாது. தமிழிலிருந்தே திராவிடம் என்ற மாறுபாடு ஏற்பட்டிருக்கவேண்டும் என்ற முடிபுக்கு இது நம்மை இட்டுச் செல்கிறது.

தமிழ் என்ற சொல் திராவிடம் என்பதன் மரூஉ அல்ல என்ற இந்த முடிபு கடந்து, திராவிடம் என்ற சொல்லும் மரூஉவல்ல என்று வேறு பல ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஸ்பெயினிலும் ஃவிரான்சிலும் பிரிட்டனிலும் வாழ்ந்த பழங்குடி மக்களின் குருமார் துருயிதர்கள் என்றழைக்கப்பட்டனர். இது திராவிடம் என்ற இனப் பெயருடன் தொடர்புடையது என்று அவர்கள் கருதுகிறார்கள். இது உண்மையானால், தமிழ் என்ற பெயரைப் போலவே, திராவிடம் என்ற பெயரும் மிகப் பழமையான இனப் பெயர் என்று ஏற்படுகிறது.

திருத் தந்தை ஹீராஸ் இரண்டு சொல்மூலப் பகுதிகளும் தொடர்புடையன என்று கருதுகிறார். தமிழ் என்பதன் சொல்மூலம் 'இழ்' என்பது. இது மொழியையும் இனத்தையும் குறிக்கிறது. திராவிடம் என்ற சொல் திரை, இடம் என்ற சொற்களாலானது. 'இடம்' 'இழ்' என்பதனுடன் தொடர்புடையது. 'இடம்' என்ற சொல் 'இழ்' இனத்தவர் வாழும் தாயகத்தை முதலில் குறித்துப் பின் பொதுவாக இடம் என்ற பொதுப் பொருள் பெற்றது.

ஈழம் என்ற இலங்கையின் பெயர் 'இழ்' இனத்தவர் நாடு என்ற பொருளுடையதே.

திரையர் தமிழரின் ஒரு பெரும் பிரிவினர். அவர்கள் கடற்கரையில் வாழ்ந்த நெய்தல் நிலவாணர். அவர்களே உலகெங்கும் பரந்து குடியேறினர். அவர்கள் தாயகம் தமிழகமாகிய திராவிடம். பரவிய இடங்களில் அவர்கள் 'திரை' என்ற சொல்லடியாகப் பல இனப் பெயர் இடப் பெயர்கள் பூண்டனர். இத்தாலியில் உரோமர்களுக்கு முற்பட வாழ்ந்த கலைப்புகழ் வாய்ந்த எட்ரஸ்கானர், நடுக் கடலில் கீழ்பால் வாழ்ந்த திரேனியர் பெயர்கள் இதை நினைவூட்டுவன.

நடுநிலக் கடல் சூழ்ந்த நாடுகளிலும் எகிப்திலும் 'ஊர்' 'சேலம்' என்ற இடப் பெயர், நகர்ப்பெயர்கள், 'மிட்ஸ்' 'பாண்டியன்' என்ற அரசர் பெயர்கள், பிற மலைப் பெயர், தெய்வப்பெயர்கள் ஆகியவை தமிழக, தமிழின தொடர்பை நினைவூட்டுவனவாயுள்ளன.

ஸ்பெயின்முதல் சீனாவரை பரவி வாழ்ந்த இனம் அல்லது இனத்தின் பெரும்பகுதி திராவிட இனத்துடனும், நாகரிகத்துடனும் நெருங்கிய தொடர்புடையது என்பதில் ஐயமில்லை. இன்றைய உலகிலும் அவ்வினத் தொடர்புடைய பிற புதிய இனத்தவரே நாகரிக உலகில் பெரும்பங்கு கொண்டுள்ளனர்.

'சரித்திரம் பேசுகிறது'

எழுதியவர் :

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார்.

வெளியிட்டோர் :

அருணோதயம்,

சென்னை-14.

விலை ரூ. 3-0-0.

வெண்பாப் போட்டி

18. நெஞ்சமே அஞ்சாதே நீ.

வெண்பாப் போட்டி 18ன் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில், மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

கொஞ்சமோ வீரரெண்? கூரறிவின் விஞ்சையர்
பஞ்சமோ? ஆள்வலியால் நந்தமிழ்க்கு-நஞ்சனைய
வஞ்சமே செய்வானை வாளோச்சி மாய்த்திடுவோம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—அன்புமாற்கண்ணன், மாயூரம்.

★

பருத்திரு தாட்டமெனும் பாழ்த்துறையில் மூழ்கித்
திருத்தகுநற் செல்வமெலாந் தீர்த்து-வருத்தமுற
செஞ்சொற் பகர்ந்தொருவர் சீர்திருத்த நானுய்ந்தேன்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—க. வீ. வரதன், சென்னை.

★

கட்டமுடன் கத்திமுனை காட்டிவந்த காவலர்கள்
பட்டவித பாடமெல்லாம் பாரறியும்-திட்டமுடன்
விஞ்சும் விடுதலைப்போர் வேல்பார்த்து வெம்பிடுமோ?
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இரா. சிங்கப்பெருமாள், கரந்தை.

★

அங்கம் சிதைத்திடினும், ஆவி பிரித்திடினும்,
தங்கத் திராவிடத்தைத் தான்மீட்க-சிங்கமென
வெஞ்சமரில் பாய்ந்தேதான் வீணரினைத் தீர்த்திடவே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—சி. தமிழன்பன், போடிநாயக்கனூர்.

★

போர்ப்பறைதான் கேட்டவுடன் பூரித்துத் தன்மகனை
மார்போ டணைத்து மகிழ்வுடனே-போர்க்கனுப்பும்
நெஞ்சம் படைத்தோர் நிறைந்துள்ள தாலெதற்கும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. தியாகராசன், திருச்சி.

★

பிரிந்ததனால் கோதை பிணங்கிடுவாள், நாவில்
நெருப்பேற்றி நீவாட நோய்கொடுப்பாள்-ஏற்றமிகு
வஞ்சியவள் ஊடிடுவாள்; வாய்வெளுக்கக் கூடிடுவாள்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—மு. காளத்திநாதன், சூளை.

★

அன்றிருந்த வாழ்வும் அரசிருந்த தீந்தமிழும்
என்றுவரு மென்றுநீ ஏங்கற்க இன்றிருக்கும்
வஞ்சகரை மாய்த்திடநாம் வாள்தீட்ட முற்படுவோம்
நெஞ்சமே! அஞ்சாதே நீ.

சி. சுந்தரேசன், அண்ணாமலைநகர்.

★

நெஞ்சம் புகுந்தஅவர் நேசம் மறப்பாரோ
வஞ்சம் மிகுசாதிப் பூசலுக்குக்-கொஞ்சமும்
அஞ்சார் அவர்காண வந்திடுவார்; பிஞ்சோர்ந்த
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—எம். என். பழனிசாமி, சிவகங்கை.

★

வௌவால் குணத்தோர் வெவ்வேறிலே பற்றவைத்த
செவ்வானம் போன்ற தீப்பொறிகள்-ஒவ்வொன்றும்
அஞ்சா அழகிரியாய் ஆகும் அதனாலே,
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

கார்மலர வந்திடுவேன் கண்மணியே என்றுரைத்தார்.
சீர்மலர என்னுடலைச் சேர்த்தணைத்து-ஊர்அலரே
மிஞ்சியது என்றாலும் மீண்டிடுவார் வெற்றியொடு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ச. இராமசாமி, தலைமையாசிரியர், தஞ்சை.

நேரு முழக்கம் நெடுக முழங்கிடினும்
காரியம் இல்லையினிக் கண்விழித்தோம்-பேரெழில்
கொஞ்சும் திருஇடத்தைக் கொண்டிடுவோம் நாம்விரைவில்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—பி. ஆர். சின்ன கிருஷ்ணசாமி, திருப்பூர்.

★

நாடுகின்ற நன்னாடும் நண்ணுகின்ற நல்லரசும்
தேடுகின்ற நல்வாழ்வும் நீதறவே-கூடுங்காண்
துஞ்சேல்! துரிதமுட னேயுழைப் பாய்தமிழ்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—பொ. நாராயணன் பி. ஏ. தெற்குச்சூரங்குடி.

★

சுற்றம் வெறுக்கவெனைச் சூழ்ந்தோரும் விட்டகல
உற்றபொல் லாவறுமை ஓ! கொடிதே-மற்றதனால்
சஞ்சலமே யானாலும் சற்றுந் தளராமல்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—முருகதாசன், சென்னை 12.

★

ஒட்டாத சாதியென்று ஊரார் விலக்குகிறார்
கிட்டாத கன்னியவள் கெஞ்சுகிறாள்-விட்டிடவோ?
கஞ்ச மலர்முகத்தாள் காதல் உனக்குண்டு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—மு. வைத்திலிங்கம், பவானி.

★

முடவர் முழுமதியை முயன்றும் பிடிப்பாரோ?
வடவர் திருவிடத்தை வதைக்கின்றார்-விடமனையர்
வஞ்சக மழித்தொழிக்கும் வீரர் படைசேர
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ஏ. எம். ஜேம்ஸ், குல்லூர்சந்தை.

★

கேடுதரும் ஆரியத்தின் கேண்மை தனைவிரும்பிப்
பீடுபெற்ற செந்தமிழர் பின்னுற்றார்-பாடுபட்டுச்
செஞ்சொல் புகன்(று)இந்தத் தீமை ஒழிப்பதற்(கு)என்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வித்வான். மாவண்ணா. தேவராசன், திருவத்திபுரம்.

★

சேவல்கூ வாததனால் செம்பரிதி தோன்றானோ?
மேவு திருவிடத்தை மேதினியில்-மேவாதார்
கொஞ்சமிருந் தக்காலும் கொய்வோம்விடுதலையே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—கு. இரமாதேவி, சென்னை-1.

★

சாதி மதநெறிக்கும் சாத்திரக் குப்பைக்கும்
வேத நெறிகாட்டும் வேதியர்க்கும்-நீதியது
நெஞ்சகத்தில் இல்லாத நீசர்க்கும் என்றென்றும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—தமிழ்நெஞ்சன், கரந்தை.

★

காட்டிக் கொடுத்திடுவோர், கயமை செய்துறைவோர்
நாட்டின் விடுதலைக்கு நல்லதெண்ணார்,-நாட்டமுடன்
தஞ்சமாவோர் பதவிக்கு; தக்கபாடம் பெற்றிடுவர்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

ஏபி. ராமலிங்கம், திருச்சி.

★

அண்ணா அகத்திருக்க இன்தமிழின் மூச்சிருக்க
திண்டோள் மறவர் திரண்டிருக்க-ஒண்ணார்
பஞ்சாய்ப் பறப்பர்; பகற்கனவோ தாயகந்தான்?
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—கே. எஸ். மாணிக்கம், சிவகங்கை.

★

வந்தவரின் சூழ்ச்சி வலையதனில் வீழ்ந்ததனால்
சொந்தமொழி நாடு சுகமிழந்தாய்-அந்தஙய
வஞ்சநரிக் கூட்டமதை வாளெடுத்து ஓட்டுதற்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ந. ஜாபர், தேவத்தூர்.

★

வெற்றிமேல் வெற்றி வெகுவாகப் பெற்றிடினும்
பெற்றிடுவார் தோல்வி பெருந்தகையே-உற்றுணவு
கொஞ்சமே யானாலும் கூழே பசியாற்றும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. தாமரைச்செல்வன், உடுமலைப்பேட்டை.

★

கல்விசேர் மூவேந்தர் காலமுதல் இன்றுவரை
தொல்புகழ்சேர் ஏடுகளைத் தோற்றுவித்த-நல்மொழியை
கொஞ்சலுடன் தஞ்சமெனக் கொள்ளுதற்கே எந்நாளும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வி. எபராஜ், பூனா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.